மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர் - 641 018.
நாள்: 30.10.2017

**பத்திரிக்கை செய்தி**

# வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்-2018

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்-2018 கோயம்புத்தூர் மாவட்டத்தில் 03.10.2017 முதல் 31.10.2017 வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளுவதற்கு அந்தந்த வாக்குப் பதிவு மையங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் விண்ணப்ப படிவங்களை பெற்று பூர்த்தி செய்து தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது, மேலும் வாக்காளர் பட்டியலில் விடுப்பட்டோர் மற்றும் 18 வயது நிறைவடைந்தவர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக அக்டோபர் 8, மற்றும் 22 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் அனைத்து வாக்குப் பதிவு மையங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

தற்பொழுது இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் -2018 ஆணையிட்டிருந்த காலம் 31.10.2017 என்பதிலிருந்து 30.11.2017 வரை காலம் அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தி அடையும் நபர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் விடுப்பட்டவர்கள், ஏற்கனவே உள்ள சட்டமன்ற தொகுதியிலிருந்து வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்கள் ஆகியோர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க பொதுமக்கள் தற்போது வழங்கப்பட்டுள்ள கால அவகாச நீட்டிப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7, பெயர் மற்றும் முகவரி திருத்தங்கள் மேற்கொள்ளுவதற்கு படிவம் 8, மற்றும் குறிப்பிட்ட சட்டமன்ற தொகுதியின் ஒரு பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு குடிபெயர்ந்தவர்கள் முகவரி மாற்றம் செய்ய படிவம் 8A ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.

30.11.2017 வரை பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 05.01.2018 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

ஓம்.த.ந.ஹரிஹரன்
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியர்,கோயம்புத்தூர்.

பெறுநர்
1). அனைத்து பத்திரிக்கை ஆசிரியர்கள்.
2). தனி வட்டாட்சியர் / மாவட்ட மேலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கோயம்புத்தூர்.

இச்செய்தி வெளியீட்டை உள்ளூர் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

/ உண்மை நகல் / உத்திரவின்படி /

30/10/17

*மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்*
*மாவட்ட ஆட்சியருக்காக, கோயம்புத்தூர்.*

30/10/2017